சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் :20.11.2024
வா.சா.1 - கண்ணன்
O.S No. 126/2021 c/w 246/2021:
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

புல்லச்சி என்பவர் என்னுடைய தகப்பனார். என் தகப்பனாருக்கு 2 தாரம் என்றால் சரிதான். முதல் தாரத்து பெயர் மூக்கம்மாள் என்றால் சரிதான். முதல் தாரம் மூக்கம்மாளுக்கு, பிறந்தவர்கள் தான் பிச்சி, சின்னபிலி, அரியம்மாள், ராஜலெட்சுமி என்றால் சரிதான். என் தகப்பனார் மூக்கம்மாள் காலமான பிறகு பஞ்சம்மாளை திருமணம் முடித்தார் என்றால் சரிதான். என் உடன் பிறந்தவர்கள் 3 சகோதரிகள் மற்றும் நான் ஆவேன். என் சகோதரிகள் பெயர் மணி என்ற மது, நேசமணி என்ற பிரியா, புவனேஸ்வரி என்ற நந்தினி என்றால் சரிதான். மொத்தம் என் தந்தைக்கு மொத்தம் 8 பிள்ளைகள் என்றால் சரிதான். என் தகப்பனாரையும் சேர்த்து பாகஸ்தர்கள் மொத்தம் 9 பேர் என்றால் சரிதான். வழக்கு சொத்து சர்வே நம்பர் 48/5 வலையபட்டி கிராமத்தில் உள்ளது. என் தந்தையின் தந்தை பெயர் அரியான் என்றால் சரிதான். வழக்கு சொத்து சர்வே நம்பர் 48/5 எனது தகப்பனாரின் பூர்வீக சொத்து என்றால் சரியல்ல, கிரைய சொத்து ஆகும். மேற்படி சொத்து அல்லாமல் 3 இலக்க சொத்துக்கள் பூர்விக சொத்துக்கள் என்று குறிப்பிட்டு இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.246/2021 வழக்கினை மூத்ததாரத்து பிள்ளைகள் தங்களுக்கு பாகம் வேண்டும் என்று எண்ணி தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.5 எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் 28.08.2020 பத்திரத்திலேயே எனது தகப்பனார் எனக்கு பூர்விக பாத்தியப்பட்ட சொத்து

என்று எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என் தந்தையுடைய மூத்ததாரத்து மகளான பிச்சி பெயரை மட்டும் சேர்த்து இந்த வழக்கினை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். சர்வே நம்பர் 48/5 வழக்கு சொத்தானது மொத்தம் 28 செண்ட் என்றால் சரிதான். வழக்கு சொத்து சர்வே நம்பர் 48/5ல் ஒருபகுதியில் பிரதிவாதி பிச்சி வீடு கட்டி,மின் இணைப்பு பெற்று வரி செலுத்தி அனுபவம் செய்து வருகிறார் என்றால் வசித்து வருகிறார், ஆனால் வீடு அவர் கட்டவில்லை. என் தகப்பனார் கட்டி கொடுத்தது. வழக்கு சொத்தில் வீடு கட்டி எத்தனை ஆண்டுகள் ஆகிறது என்றால் முதலில் அது ஆட்டுக்குட்டியை வைக்கும் கொட்டமாக இருந்தது. அதனால் பிச்சிக்கு வீடு இல்லை என்பதால் அதில் தங்கிக்கொள்ளும்படி அப்பா கூறினார். அனுமதியின் பேரில் அங்கு வசித்து வருகிறார். மேற்படி விபரத்தை என்னுடைய வழக்குரையில் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து வீட்டிற்கான வரிவிதிப்பு 2/77 மற்றும் 2/256 கதவிலக்கத்திற்கான வரியை பிச்சி தான் செலுத்திவருகிறார் என்றால் அவர் அங்கு குடியிருப்பதால் கொடுத்து வருகிறார். வழக்கு சொத்தில் உள்ள வீட்டை பிரதிவாதி பிச்சி தன்னுடைய சுயசம்பாத்திய வருமானத்தினால் வீடு கட்டி, வரி செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து பூர்விக சொத்து என்பதால் எனக்கு என் தந்தை எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் வா.சா.ஆ.5 செல்லாது என்றால் சரியல்ல, அது அவருடைய தனிப்பட்ட சொத்து ஆகும். வழக்கு சொத்து என் தந்தையுடைய சொத்து என்பதை நிருபிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, வேண்டுமென்றால் தாக்கல் செய்கிறேன். செல்லாதபத்திரத்தை வைத்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றும், வழக்கு சொத்தில் எனக்கு தனிப்பட்ட உரிமை இல்லை என்பதால் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

பிரதிவாதி பிச்சி சட்டப்படியான வாரிசு என்பதால் அவர் வழக்கு சொத்தில் குடியிருந்து வருகிறார் என்றும், நான் இந்த வழக்கில் கோரியிருக்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2024.11.20 17:40:06 +0530

Sub Judge
Melur